திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதாரக் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம்.

*வினா எண். 136—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சுகாதாரம் கல்வி பற்றிய முன்னோடித் திட்டம் ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் செயல் படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) 'யுனிசிப்' நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று ஒரு முன்னோடி சுகாதாரக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற ஒரு செயலாக்க குறிப்பு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தினுடைய பலன் என்ன? அதற்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கக்கூடிய வகையிலே நமது அரசு மீண்டும் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் விரிவாக இருக்கின்றது. ஆனால் இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. அது குறித்து மத்திய அரசிலிருந்து ஒரு கடிதம் வந்தது. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த பிறகுதான் பலனும் கிடைக்கும். ஆகவே இப்போது அவர் கேட்கின்ற கேள்விக்குப் பதில் இருந்தால் சொல்லுங்கள்; இல்லை என்றால் இல்லை என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, திட்டமே கைவிடப்பட்டிருக்கின்றது. யுனிசிப்நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்று இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று நாம் எழுதி இருந்தோம். ஆனால் வொர்ல்ட் பேங்க் உதவியின் மூலம் இன்டென்சிவ் நியுட்ரிஷன் ப்ரோக்ராம் என்று இருக்கின்ற திட்டத்தின் மூலமே இதை நிறைவேற்றலாமே என்றும் அதனால் இத்திட்டத்திற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என்றும் மத்திய அரசு நமக்குத் தாக்கீது அனுப்பி இருக்கின்றது.

1981 ஜனவரி 31]

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால் அதனை தற்போது வளர்ந்து வருகின்ற தூத்துக்குடி நகரத்திலே அமைப்பதற்கு அரசுமுன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலியில், தானே தூத்துக்குடியும் இருக்கிறது. வேண்டுமானல் அதுபற்றித் தனிக் கேள்விபோட்டுக் கொள்ளுங்கள்.

கோபி அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை.

*வினா எண். 137 திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோபி நகராட்சியில் உள்ள அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் பணியினை அரசு எப்போது துவங்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபியிலே இருக்கிற மருத்துவ மனையும், உடுமலைப் பேட்டையிலே இருக்கிற மருத்துவமனையும், திருப்பூரிலே இருக்கிற மருத்துவ மனையும் ஒரே ஆண்டிலேதான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மற்ற இரு மருத்துவமனைகளிலும் 200 படுக்கை வசதிகள் கொண்டவையாக மாற்றப்பட்ட பிறகும், கோபியிலே இருக்கிற மருத்துவ மனை மட்டும் 75 படுக்கைகள் கொண்டதாகவே இருக்கிறது. ஆகவே வருகிற நிதி ஆண்டிலாவது அதை விரிவுபடுத்துவதற்கான ஆலோசனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதை விஸ்தரிப்பதற்கான எந்த விதமான திட்டமும் இல்லை என்றுதான் சொன்னேன். அடுத்த ஆண்டிற்காக, டைரக்டர் ஆப் மெடிகல் சர்விஸஸ் அண்டு பேமிலி பிளேனிங் அவர்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையில், இப்போது இருக்கக் கூடிய 75 படுக்கைகளை 100 படுக்கைகளாக ஆக்க வேண்டும் என்றும், அவுட் பேஷண்ட் 635 பேர்கள் வருவதற்கான வசதிகள் இருப்பதை அதிகப்படியாக்கி விஸ்தரிக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அதன்படி அடுத்த ஆண்டு அமுல் படுத்துவது குறித்து, டி.எம்.எஸ். அவர்களின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.